All Rights Reserved

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2011

## தரம் - 11
## சைவநெறி - I

பெயர்/சுட்டெண் :......................................................... நேரம் : 1மணித்தியாலம்

**❖எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

01. விநாயகப் பெருமானை நோக்கி அனுடிக்கப்படும் விரதம்.

1. திருக்கார்த்திகை
2. வரலட்சுமி நோன்பு
3. பெருங்கதை
4. திருவாதிரை விரதம்

02. பௌத்த வேடத்துடனிருந்து சிவனருள் பெற்ற நாயனார்.

1. நீலகண்ட நாயனார்
2. சாக்கிய நாயனார்
3. விறன்மிண்ட நாயனார்
4. அப்பர்சுவாமிகள்

03. நாலாயிரத் திவ்ய பிரபந்தம் எனும் நூலைத் தொகுத்தவர்.

1. மணிவாசகப் பெருமான்
2. ஆண்டாள் நாச்சியார்
3. பெரியாழ்வார்
4. நாதமுனிகள்

04. பஞ்சபுராணம் பாடுகின்ற ஒழுங்கில் மூன்றாவதாகப் பாடப்படுவது.

1. புராணம்
2. திருப்பல்லாண்டு
3. திருவாசகம்
4. திருவிசைப்பா

05. ஆடிப்பிறப்பின் சிறப்புப் பற்றிப் பாடிய நம்நாட்டுப் புலவர்.

1. ஆறுமுகநாவலர்
2. சின்னத்தம்பிப் புலவர்
3. தேசிகவிநாயகம் பிள்ளை
4. நவாலியூர் - சோமசுந்தரப் புலவர்

06. தந்தை வழிக்கான பிதிர்க்கருமத்தைச் செய்வதற்குச் சிறப்பான தினம்.

1. சித்திரை பூரணை
2. வைகாசி மூலம்
3. மாசிமகம்
4. ஆடி அமாவாசை

07. ஈரமண்ணிற் பாவையைப் போல் உருவம் செய்து பராசக்தியை வழிபாடு செய்வது.

1. கேதாரகௌரி விரதம்
2. பாவை நோன்பு
3. வரலட்சுமி விரதம்
4. நவராத்திரி விரதம்

08. "அண்டமெலாம் பூத்தாள்"... என்ற சொற்றொடரின் பொருள்.

1. உலகத்தைப் படைத்தவள்
2. மலர்களில் விருப்பம் உள்ளவர்
3. பாவங்களை நீக்குபவள்
4. மேற்கூறிய எதுவும் இல்லை

09. நினைத்தாலே முத்திதரும் திருத்தலம்.

1. சிதம்பரம்
2. திருவாரூர்
3. காஞ்சீபுரம்
4. திருவண்ணாமலை

10. "செய்யனே திருவாலவாய் ஐயனே...." எனத் தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியவர்.

1. சுந்தரர் பெருமான்
2. சம்பந்தர் பெருமான்
3. அப்பர் பெருமான்
4. மணிவாசகப் பெருமான்

11. புறச்சந்தான குரவர்களில் முதன்மை பெறுபவர்.

1. அருணந்தியார் 2. மெய்கண்டர் 3. உமாபதியார் 4. பரஞ்சோதியர்

12. கந்தபுராணம் நமக்கு உணர்த்தும் வாழ்வியல் தத்துவம்.

1. ஆணவம் அழிவைத் தரும் என்பது.
2. சூரபன்மனின் வீரதீச் செயல்
3. பிறரைத் துன்புறுத்தல் வேண்டும்
4. சூரனின் தம்பி சிங்கமுகன் என்பது

13. இருபா இருப.்.து எனும் நூலை இயற்றியவர்.

1. மனவாசகம் கடந்தேவர்
2. சத்தியஞான தரிசினிகள்
3. உமாபதியார்
4. அருணந்தியார்

14. அமாவாசை தினத்தில் பௌர்ணமி நிலவை வானத்திலே தோன்றச் செய்தவர்.

1. குமரகுருபர் 2. அபிராமிபட்டர் 3. தியாகேசர் 4. சண்டேசுவரர்

15. நாம் கடைப் பிடிக்க வேண்டிய உத்தம குணங்களாவன.

1. அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச் சொல்
2. இனியவை கூறுதல், வறியோர்க்கு உதவுதல்
3. புறங்கூறுதல், சூதாடுதல், பிறர் மனை நயத்தல்
4. பொருளீட்டுதல், வங்கியிலிடுதல், திட்டமிடுதல்

16. ஆறுமுகநாவலர் முதல் முதலாக அமைத்த பாடசாலை.

1. சைவப்பிரகாச வித்தியாலயம்
2. நாவலர் பாடசாலை
3. இந்துக்கல்லூரி
4. பரமேஸ்வராக் கல்லூரி

17. கந்தர் கலிவெண்பா எனும் நூலை இயற்றிவர்.

1. அருணகிரிநாதர்
2. குமரகுருபரர்
3. அண்ணாமலை தேசிகர்
4. சுப்பிரமணிய பாரதியார்

18. சதாசிவம் என்ற பிள்ளைத் திருநாமம் கொண்ட இலங்கையிலுள்ள சித்தர்.

1. சித்தானைக் குட்டி சுவாமிகள்
2. செல்லப்பா சுவாமிகள்
3. யோகர் சுவாமிகள்
4. நவநாத சித்தர்

19. சைவ வித்தியாவிருத்திச் சங்கம் உருவாக்கப் பட்ட ஆண்டு.

1. 1923 2. 1920 3. 1928 4. 1922

20. யாழ் நகரில் இராமநாதன் மகளிர் கல்லூரியை நிறுவியவர்.

1. சேர். பொன் இராமநாதன்
2. சேர். பொன் அருணாசலம்
3. ஆறுமுகநாவலர்
4. இந்து போர்ட் இராசரத்தினம்

21. சகலகலா வல்லிமாலை என்ற நூலில் துதிக்கப்படும் தெய்வம்.

1. சரஸ்வதி 2. உமையம்மை 3. அபிராமி 4. மகாலட்சுமி

22. சிரார்த்தம் (திவசம்) செய்வது.

1. தலயாத்திரை மேற்கொள்ள
2. தேவர்களை மகிழ்விக்க
2. இறந்தவர்களின் ஆத்மாசாந்திக்கு
4. நேர்த்திக் கடனை நிறைவேற்ற

23. "சதசத்து" என்றழைக்கப்படுவது.

1. ஆன்மா 2. ஆணவம் 3. கன்மம் 4. இறைவன்

24. "இருபொருளும் காட்டாது இது" என்ற எவரியில் "இது" எனப்படுவது.

1. பாசம் 2. ஆன்மா 3. ஆணவம் 4. உயிர்

25. சங்கம வழிபாடு என்றால்

1. சங்கம் அமைத்து வழிபடுதல்
2. சிவனடியார்களை வழிபடுதல்
3. இறைவனை வழிபடுதல்
4. சிவத்தை வழிபடுதல்

26. பிரமதேவனின் ஆணவத்தை அடக்குவதற்காக சிவனுடைய அம்சமாகத் தோன்றிய மூர்த்தம்.

1. வீரபத்திரர் 2. வைரவர் 3. காலசங்கரர் 4. நடேசர்

27. நாச்சியார்திருமொழி, திருப்பாவை ஆகிய பிரபந்தங்கள் பாடியவர்.

1. நம்மாழ்வார் 2. பேயாழ்வார் 3. பெரியாழ்வார் 4. ஆண்டாள்

28. திருப்படைக் கோயில் என்றும் தேசத்துக்கோயில் அழைக்கப்படும் ஆலயம்.

1. திருக்கோணேஸ்வரம்
2. ஒட்டுச்சுட்டான் தான்தோன்றியீஸ்வரம்
3. மண்டூர் முருகன் ஆலயம்
4. கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரம்

29. சாத்வீக குணமுள்ளவர்களிடம் காணப்படுவது.

1. எரிச்சலும் பொறாமையும்
2. சாந்தமும் அமைதியும்
3. கவலையும் சோகமும்
4. சோர்வும் மந்தமும்

30. சோழ மன்னர்களால் பொலனறுவையில் கட்டப்பட்ட சிவாலயத்தின் பெயர்.

1. ஆதிகோணேஸ்வரம்
2. வானவன் மாதேவியீஸ்வரம்
3. நந்தீஸ்வரம்
4. முன்னேஸ்வரம்

31. கன்னைக் கொத்திக் காக்கைப் பிள்ளையார் வீற்றிருக்கும் திருத்தலம் அமைந்திருக்கும் இடம்.

1. இணுவில் 2. அளவெட்டி 3. பறாளை 4. முறிகண்டி

32. கொக்கட்டிச்சோலை தான் தோன்றியீஸ்வரம் ஆலயத்தைப் பரிபாலனம் செய்பவர்கள்.

1. அறநிலைத்தார் 2. அறங்காவலர்கள் 3. பூசாரிமார் 4. வண்ணக்கர்

33. "வேகாவனேஸ்வரர்" என்னும் பெயருடன் இறைவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலம்.

1. ஒட்டுச்சுட்டான் 2. வற்றாப்பளை 3. திருகோணமலை 4. வந்தாறுமூலை

34. "நரக சதுர்த்தசி" என அழைக்கப்படுவது.

1. பொங்கல் பண்டிகை 2. தீபாவளிப் பண்டிகை 3. வருடப்பிறப்பு 4. விநாயக சதுர்த்தி

35. "என்கடன் பணி செய்து கிடப்பதே" எனப் பாடியவர்.

1. அப்பர் 2. சுந்தரர் 3. சம்பந்தர் 4. மணிவாசகர்

36. நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் தொகை பாடுவதற்கு உதவிய நூல்.

1. பெரிய புராணம்
2. திருமுறைகள்
2. திருத்தொண்டர் திரு அந்தாதி
4. கந்த புராணம்

37. பத்தாந் திருமுறையாக அமைவது.

1. திருவிசைப்பா 2. அடங்கன் முறை 3. திருமந்திரம் 4. திருப்பல்லாண்டு

38. சிவலிங்க பூசை செய்வதற்கான தகுதியளிக்கும் தீட்சை.

1. ஔத்திரி தீட்சை 2. நயன தீட்சை 3. விசேட தீட்சை 4. நிர்வாண தீட்சை

39. "பனிச்சை ஆடிய பாடற்சிந்து" பாடல்கள் படிக்கப்படும் ஆலயம்.

1. தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம்
2. வற்றப்பளை கண்ணகையம்மன் ஆலயம்
3. காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம்
4. நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலயம்

40. சுதர்சனச் சக்கரத்தை மூலமூர்த்தியாக அமைத்து வழிபாடு செய்யும் ஒரேயொரு திருத்தலம்.

1. வல்லிபுர ஆழ்வார் திருத்தலம் - பருத்தித்துறை
2. நெடுமால் கோயில் - தெஹிவளை
3. வரதராஜப் பெருமாள் கோயில் - பொன்னாலை
4. முகத்துவாரம் விஷ்ணு கோயில் - கொழும்பு

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
முழுப் பதிப்புரிமையுடையது
All Rights Reserved

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

## ஆண்டிறுதிக் கணிப்பீடு - 2011

## தரம் - 11
## சைவநெறி - II

சுட்டெண் :............................................................... நேரம் : 2மணித்தியாலம்

**❖இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

(01) பின்வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை தருக.

1. ஒன்பதாம் திருமுறையில் அடங்கும் நூல்கள் எவை?
2. திருமுறைகளை தொகுத்தவர் யார்? தொகுபித்தவர் யார்?
3. ஆலயங்களில் காலைச் சந்திப் பூசை நடைபெறும் காலம் என்ன?
4. “பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன்கழல் - போற்றி” என்னும் பாடல்வரியில் “புகலியர்கோன்” எனப் போற்றப்படுபவர் யார்?
5. “திரிமலத்தார்” எனப்படுபவர் யாவர்?
6. மாமாங்கேஸ்வரம் மாமாங்கப்பிள்ளையார் என்று அழைக்கப்படுவதன் காரணம் என்ன?
7. நால்வகை முத்திகளும் எவை?
8. அந்தக்கரணங்கள் நான்கினதும் பெயர்களைத் தருக.
9. நமச்சிவாய தேசிகர் யாருடைய சீடர்? அவர் தோற்று வித்த ஆதீனம் எங்கே உள்ளது?
10. நரிகளைப் பரிகளாக்கிய சமய குரவர் யார்? இவரது பாடல்கள் எத்தனையாந் திருமுறையில் அடங்கும்?

(02) பின்வரும் திருமுறைப் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிசகாது திருத்தமாக எழுதுக.
அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
அவற்றை பாடியோர், பாடப்பட்ட சந்தர்ப்பம் என்பவற்றையும் எழுதுக.

1. “சிறையாரு மடக்கிளியே.......”
2. “திருக்கோயிலில்லாத...........”
3. “மூவரென இருவரென...........”
4. ஆதியும் அந்தமும்............”
5. சிவ சிவ என்கிலர்..............”

(03) “எவ்வுயிரும் என்னுயிர்போலெண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பரபரமே”

1. இப்பாடல் வரிகள் யாரால் பாடபப்பட்டவை?
2. இப்பாடலாசிரியர் இறைவனிடம் எதனை வேண்டுதல் செய்கின்றார்?
3. பிற்காலத் தோத்திரப் பாடல்களில் அடங்கும் நூல்களில் மூன்று எழுதுக.
4. குமரகுருபர சுவாமிகள் இயற்றிய நூல்களுள் இரண்டு எழுதுக.

(04) “மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்......”

1. நாம் விலக்கிக் கொள்ள வேண்டிய தீய ஒழுக்கங்கள் மூன்று தருக.
2. எமது மனத்தில் வளர்த்துக் கொள்ள வேண்டிய உத்தம குணங்கள் நான்கு தருக.
3. விரதங்களை அனுடிப்பதால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக.
4. தாயை இழந்தவர்கள் அனுடிக்க வேண்டிய கடமை விரதங்கள் எவை?

(05) 1. பெரிய புராணம் யாரால் எழுதப்பட்டது?
இந்நூலுக்கு முதல் நூல் எது?
துணை நூல் எது?
2. ஆலால சுந்தரர் புவியிலே பிறப்பெடுப்பதற்குக் காரணமாயிருந்த பெண்களின் பெயர்களை எழுதுக.

3. சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலிற் பாடிய தேவாரம் எது? இறுதியாகப் பாடிய பதிகம் எது?
4. சுந்தரரின் குருபூசைத்தினம் எது?

(06) 1. "நாட்டார் வழிபாடு" வேறு எவ்வெப் பெயர்களால் அழைக்கப்படுகின்றது? மூன்று தருக.
2. நாட்டார் வழிபாட்டிலே பிரதான அம்சமான ஆண்டுப் பொங்கல் எப்பொழுது நடைபெறுகின்றது? இச் சடங்கினை நிகழ்த்திவைப்பவர் யார்?
3. கண்ணகி விழிபாட்டு முறைகளால் ஏற்படும் நன்மைகள் மூன்று தருக.
4. இலங்கையிலுள்ள கண்ணகி வழிபாட்டுக்குரிய ஆலயங்கள் மூன்று தருக.

(07) " ஆலயம் தொழுவது சாலவும் நன்று"

1. "ஆலயம்" என்ற சொல்லின் பொருள் என்ன?
2. ஆலயத்திலே செய்யக்கூடிய சரியைத் தொண்டுகள் நான்கு தருக.
3. மக்களின் பசிப்பிணி போக்குவதற்காக சம்பந்தரும் அப்பரும் சேர்ந்து செய்த சேவை என்ன?
4. நந்தவனத்தில் இருக்க வேண்டிய நால்வகைப் பூக்களும் எவை?